# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு : 9

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மதிப்பெண்கள் : 50

### பகுதி – அ

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7X1=7

1. வாயில் இலக்கியம் என்று அழைக்கப்படுவது
(அ) தூது (ஆ) பள்ளு (இ) குறவஞ்சி (ஈ) உலா
2. பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்
(அ) ஊருணி (ஆ) கண்மாய் (இ) கூவல் (ஈ) மண்றகேணி
3. சோழ நாட்டின் நீர் வளம் பற்றிக் குறிப்பிடும் நூல்
(அ) கந்தபுராணம் (ஆ) கண்ணபுராணம் (இ) சீறாப்புராணம் (ஈ) பெரியபுராணம்
4. தமிழ்விடு தூது -------- என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
(அ) தொடர்நிலைச் செய்யுள் (ஆ) புதுக்கவிதை (இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
5. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர்
(அ) மாக்ஸ் முல்லர் (ஆ) பிரான்சிஸ் எல்லீஸ் (இ) ஹோக்கன் ஈ) கால்டுவெல்
6. மிசை என்பதன் எதிர்ச்சொல் எது?
(அ) கீழே (ஆ) மேலே (இ) இசை (ஈ) வசை
7. "மல்லல்" மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

### பகுதி –ஆ

**II எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5X2=10

8. கூவல் என்று அழைக்கப்படுவது எது?
9. செய்தனன் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
10. அ.கரிகாலன் கல்லணையைக் கட்டினான். செயப்பாட்டு வினையாக மாற்றுக.
அ.அவன் திருந்தினான் – பிறவினையாக மாற்றுக.
11. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
12. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
13. திராவிட மொழிக்குடும்பத்தின் வகைகள் யாவை?
14. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" – குறிப்பு தருக.

### பகுதி – இ

**III. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3X3=9

15. காலந்தோறும் தமிழ் மொழி எவ்வாறு தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது?
(அல்லது)
"நீரின்றி அமையா யாக்கைக்கு...." எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடி பிறழாமல் எழுதுக.
16. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?
(அல்லது)
அடுத்த தலைமுறைக்குத் தண்ணீர் தேவை அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.
17. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்துக.
(அல்லது)
கொடுக்கப்பட்டுள்ள தொடர்களில் முதல்வினை, துணைவினைகளை இனம் கண்டு எடுத்து எழுதுக.
அ. மலிவான விலையில் வாங்கிப் போட்டேன்
ஆ. அப்பா இன்று வந்துவிடுவார்
இ. நீ என்னை அழ வைக்காதே



www.Padasalai.Net
CamScanner

பகுதி – ஈ

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3x4 = 12

18. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



19. மொழி பெயர்க்க.

அ. Linguistics ஆ. Phonetics இ. Literature ஈ. Water Management

(அல்லது)

பழமொழி கொண்டு நிறைவு செய்க. (எவையேனும் நான்கு மட்டும்)

இளமையில் கல்வி ----------

கற்றோர்க்குச் சென்ற ----------

நோயற்ற வாழ்வே ----------

பதறாத காரியம் ----------

சித்திரமும் கைப்பழக்கம் ----------

அளவுக்கு மீறினால் ----------

20. பள்ளியில் உன்னுடைய பொறுப்புகள் எவையேனும் நான்கினை எழுதுக.

(அல்லது)

உம் பள்ளியில் நடைபெற்ற கல்வி வளர்ச்சி நாள் (ஜூலை 15) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் எழுதுக.

பகுதி – உ

V. அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடையளிக்கவும். 2x6=12

21. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) திராவிட மொழிகளின் ஒப்பியலாய்விற்கு தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை விவரி.

22. அ) "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) உங்கள் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனின், "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

www.Padasalai.Net

CamScanner